

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.6.2025) தலைமைச் செயலகத்தில் நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள் உள்பட துறையின் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### டெல்டா பாசனத்திற்கு நீர் திறப்பு - புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

# சேலம் மாவட்டத்திற்கு முதல்வர் வருகை! பிரமாண்ட வரவேற்பு!

### ஆர்.இராஜேந்திரன் - டி.எம்.செல்வகணபதி - எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!







*சேலம், ஜூன் 11*

சேலம் மாவட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை குறித்து மாவட்டச் செயலாளர்கள் ஆர்.இராஜேந்திரன், டி.எம். செல்வகணபதி, எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் அரை நூற்றாண்டு காலம் கட்டி காக்கப்பட்ட மாபெரும் இயக்கத்தினை அயராத உழைப்பினால் ஆட்சியில் அமர்த்திய தலைவர் நம்முடைய தலைவர். தமிழ் இனத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும் ஓய்வின்றி உழைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களாளே, கழகத் தலைவர் "தளபதி என்றால் உழைப்பு.. உழைப்பு... உழைப்பு"... என்று பாராட்டுதல் பெற்ற உயிரனைய தலைவர். தன் அயராத உழைப்பால் களம் கண்ட தேர்தல்கள் அனைத்திலும் வெற்றி கண்ட உன்னத தலைவர்.

எல்லோருக்கும் எல்லாம், திட்டங்களால் கடைக்கோடி தமிழனும் தன்னிறைவு பெற வேண்டும் எனும் "திராவிட மாடல்" ஆட்சியின் நாயகர், போற்றுதலுக்குரிய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருந்துறையில் இருந்து புறப்பட்டு நாளை மாலை 5 மணி அளவில் பவானி மேட்டூர் சாலையில், சேலம் மாவட்ட எல்லையான நவப்பட்டி ஊராட்சி, பெரும்பள்ளம் பகுதிக்கு வருகை தருகிறார்கள். அப்போது சேலம் மத்திய, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு ஆகிய மூன்று மாவட்டக் கழகங்கள் சார்பாக பிரம்மாண்ட வரவேற்பு வழங்கப்படுகிறது. சுமார் 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு பிரம்மாண்டமாக வரவேற்பு பொதுமக்களாலும், கழகத் தோழர்களாலும் வழங்கப்பட உள்ளது.

அடுத்த நாள் 12.06.2025 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 09.30 மணி அளவில் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக நீர் திறந்து விடுகிறார்.

இந்த நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு சேலம் புறப்பட்டு, மேச்சேரி வழியாக சேலம் வருகிற வழியில் சிந்தாமணியூர் பஞ்சுகாளிப்பட்டி பகுதியில் ஓமலூர் தெற்கு, தாரமங்கலம் வடக்கு ஒன்றிய கழகங்கள் பொதுமக்கள் மற்றும் கழகத் தோழர்கள் சார்பில் உயிரனைய தலைவருக்கு வரவேற்பளிக்கிறார்கள்.

தொடர்ந்து ஓமலூர் பேரூராட்சி பகுதியில் காடையாம்பட்டி கிழக்கு, காடையாம்பட்டி மத்திய, காடையாம்பட்டி மேற்கு, ஓமலூர் கிழக்கு, ஓமலூர் மேற்கு, ஓமலூர் வடக்கு, சேலம் வடக்கு மற்றும் தாரமங்கலம் கிழக்கு ஆகிய ஒன்றிய கழகங்கள் சார்பாக பொதுமக்கள் மற்றும் கழகத் தோழர்களும் திரண்டு போற்றுதலுக்குரிய தலைவரை வரவேற்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, சேலம் உருக்காலை சாலையில் அமைந்துள்ள அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் முற்பகல் 11.00 மணி அளவில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கியும், பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கியும் விழா பேருரை நிகழ்த்துகிறார்.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் "படை பெருத்ததால், பார் சிறுத்ததோ" என மாற்றார் வியக்கும் வண்ணம் எழுச்சியோடும், ஏற்றத்தோடும், நம் உயிரனைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களை வரவேற்று சேலம் மாவட்டமே விழாக் கோலம் கண்டது என்கின்ற வகையில் சிறப்பாக நடத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் ரூ.29,707 கோடி (இருபத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று ஏழு கோடி) மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்ட பணிகளை நிறைவேற்றிட ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வளவு திட்டங்களையும், வளர்ச்சி பணிகளையும் வழங்கி உள்ள நம் முதல்வருக்கு நன்றி பெருக்கோடு நம் உணர்வுகளை வெளிப்படுத்துகிற வகையில் கழக இருவண்ண கொடிகளை ஏந்தி, வரவேற்பு பதாகைகளை உயர்த்தி சேலம் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களும், மூன்று மாவட்ட கழகங்களின் நிர்வாகிகள், சேலம் மாநகர கழக நிர்வாகிகள், மூன்று மாவட்டங்களில் உள்ள தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர கழக, ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், ஊராட்சிக் கிளைக் கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, மற்றும் பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தல்!

# கழக எம்.பி.க்களாக நால்வர் தேர்வு!

### சட்டமன்றப் பேரவைச் செயலகம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 11 -

சட்டமன்றப் பேரவைச் செயலகம் செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு மாநிலங்களவைக்கு 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஜூன், 2025இல் நடைபெறும் தேர்தலுக்காக வரப்பெற்ற வேட்பு மனுக்கள் நேற்று (10.06.2025) முற்பகல் 11.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆய்வுக்குப் பின் கீழ்க்கண்ட 6 வேட்பாளர்கள் அளித்த வேட்பு மனுக்கள் செல்லத்தக்கவை என அறிவிக்கப்பெறுகிறது.

1. பி.வில்சன், தி.மு.க.
2. எஸ்.ஆர். சிவலிங்கம். தி.மு.க.
3. திருமதி ராஜாத்தி (கவிஞர் சல்மா) தி.மு.க.
4. கமல் ஹாசன், ம.நீ.ம.
5. ஐ.எஸ். இன்பதுரை, அ.தி.மு.க.
6. ம.தனபால், அ.தி.மு.க.
7. சுயேட்சை வேட்பாளர்களால் அளிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இவ்வாறு தேர்தல் நடத்தும் அதிகாரி அறிவித்துள்ளார்.




நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (10.06.2025) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 351வது வாரியக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, சென்னை குடிநீர் வாரியத்தின் செயல் இயக்குநர் கௌரவ் குமார் மற்றும் வாரிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

# நாளைய தமிழ்நாட்டுக்கான வலுவான அடித்தளம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை,ஜூன்.11-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**எந்த மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டாலும், மாவட்ட ஆட்சியர் போன்ற உயரதிகாரிகளைப் பார்த்தாலும், "உங்கள் பகுதியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் உணவின் தரத்தைப் பள்ளிகளுக்குச் சென்று ஆய்வு செய்தீர்களா?" என்று நான் கேட்பது வழக்கம்! அந்த வகையில், ஆசிரியர் ஒருவரே அதைச் செய்திருப்பது கண்டு மகிழ்கிறேன்.**

**காலை உணவுத் திட்டம் என்பது வெறுமனே மாணவர்களின் பசியைப் போக்கும் திட்டமோ, ஊட்டச்சத்தை அளிக்கும் திட்டமோ மட்டுமல்ல; நாளைய தமிழ்நாட்டுக்கான வலுவான அடித்தளம் அது!**




இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### துரை கபிலன் - அரிமா சு. சேகர் தலைமையில் கலைஞர் 102வது பிறந்த நாள்!

# மாற்றுத் திறனாளிகளுக்கு நல உதவிகள்! கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்குகிறார்!

### அமைச்சர் மா. சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் - கனிமொழி என்.வி.என். சோமு பங்கேற்பு!

*சென்னை, ஜூன் 11*

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி சட்டமன்ற தொகுதி கிழக்கு மற்றும் மேற்கு பகுதி கழகம் சார்பில் இன்று (11.06.2025 புதன் கிழமை) மாலை 05.00 மணியளவில் திருவான்மியூர் வடக்கு மாட வீதியில் செம்மொழி நாயகர் நவீன தமிழகத்தின் சிற்பி டாக்டர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாள் விழா மாற்று திறனாளர்களும் கலைஞர் எனும் மாட விளக்கும் எனும் தலைப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா பகுதி கழக செயலாளர்கள் துரை கபிலன், சு.சேகர் ஆகியோர் தலைமையிலும் வரவேற்புரை வட்ட கழகச் செயலாளர்கள் வி.எம்.டி.ராஜா ரமணன், எஸ்.ஜெயக்குமார், க. கணேஷ் குமார், ம. தமிழரசு, மு.தனசேகர், பெ. ராஜி, ஆ.பாண்டியன், போட்டா மதிவாணன், தே.கோபி, என்.தாமோதரன், தா.பார்த்திபன், எஸ்.முருகவேல், ஜி.பி. எஸ்.பால சதீஷ், பாரதிதாசன், பி.சக்திவேல்,

முன்னிலை வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், ஆர்.பாலசுந்தரம், அடையார் பி.ஜே. பாஸ்கர், எம்.விநாயகமூர்த்தி, அடையார் சி. சுரேஷ், சி.பரிமேலழகன், வேளச்சேரி ஆனந்தம், கழக த. ரமேஷ், வழக்கறிஞர் ஜெகதீசன் ,முகேஷ் கண்ணா, விசாலாட்சி கபிலன், கயல்விழி, ஜெயக்குமார், எம்.ராதிகா, மகேஸ்வரி முருகவேல், அருணா வேலாயுதம், ஆசா ஸ்ரீகாந்த், கே.சி.வனஜா, அ.ரவி, கிருஷ்ணன், சி.பழனி, போத்தா எழில்வாணன், சே.மைதிலி, நான் டெல்லி, குமார், ஆர்.கே.சந்திரேஷ், கா.ராகுல்.

நலத் திட்ட உதவிகள் வழங்குபவர் கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு அவர்களும் சிறப்புரை ஆற்ற உள்ளனர்.

இதில் துணை மேயர் மு.மகேஷ் குமார், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஹசன் மௌலானா, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.பி.பிரபாகரராஜா, வேளச்சேரி பி. மணிமாறன், பாலவாக்கம் கா.சோமு, வேளச்சேரி தொகுதி பொறுப்பாளர் சாய் ஜெயகாந்த், பாரதி மற்றும் சென்னை தெற்கு மாவட்ட நிர்வாகிகள் கா. தனசேகரன், எஸ். குணசேகரன், பாலவாக்கம் தா.விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், பா.வாசி பாண்டியன் மற்றும்

பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ், எம். கிரு ஷ்ணமூர்த்தி, வி.இ.மதியழகன், எஸ்.பி.ரவிச்சந்திரன், கே. கண்ணன், கொளம்பூர் ராஜன், துரை வீரமணி, ஜி.வெங்கடேசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மேடவாக்கம் பா.ரவி, துரைராஜ், எஸ். டி.தங்கராஜ், எம்.கே.ஏழுமலை, மின்னல் கந்தப்பன், அ. அரிகிருஷ்ணன், ராமாபுரம் செல்வகுமார், பி.எஸ். முருகேசன், வீர.

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எம். பார்த்திபன், சைதை சாதிபா. அருண்குமார், நா.மணிகண்டன், அஞ்சல் என். ராமன், ராமாபுரம் ராஜேஷ், டாக்டர் அனீஸ் நாகராஜ், எம்.எஸ்.ஹரிபாபு, கே.குமரேசன், கனிமொழி, தனசேகரன், நிஷா சையது மற்றும் சென்னை தெற்கு மாவட்ட கழக பிரதிநிதிகள் மா.தங்கம், இரா. மாரியப்பன், டி.பாலாஜி, எம்.பி.ராஜேஷ், எஸ்.கலைவாணன், செ.சிகாமணி, த.செல்வம், கி.ஆனந்த், எஸ்.ரவிச்சந்திரன், ஏ. சுரேஷ், எஸ்.மனோகர், சி. சூர்யா, மணிவண்ணன், ஏ.வி.ரங்கா, க.பாலாஜி, வி.ஜி.மோகன், ஜே.சீதாபதி, ஆர். நாகராஜ், ஜே.பவளவண்ணன், சி.முருகன், வி.பார்த்தசாரதி, கே.ஆர். பி.பாண்டியன், என்.நேசன், ஆ.வடிவேலன், வி.கோபாலகிருஷ்ணன் கலந்து கொள்கின்றனர்.

இறுதியாக பகுதி துணைச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.சந்தானம், எம்.ஏ. சங்கர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

இதில் வேளச்சேரி சட்டமன்ற தொகுதி உள்ளடங்கிய மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மன்றச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று செயலாளர்கள் துரை, கேபிள் சேகர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சென்னை - சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் புத்தகப் பூங்கா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

*சென்னை, ஜூன் 11 -*

சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் சென்னை புத்தகப்பூங்காவைத் தொடங்கிவைத்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**இனி, சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் சந்தித்துக்கொள்ளும் உறவுகளும் நட்புகளும், அன்பை பரிமாறிக்கொள்வதைப் போல், புத்தகங்களைக் கொண்டு அறிவைப் பரிமாறிக்கொள்ள சென்னை புத்தகப்பூங்காவைத் தொடங்கியுள்ளோம்!**

**சிந்தனையை உயர்த்திடும் நூல்கள் நமது (வாழ்க்கைப்) பயணங்களில் துணையாகட்டும்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (10.06.2025) வனம் மற்றும் சுதர்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில், வனத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாறுபாடு மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், முதன்மைத் தலைமை வனபாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி. முதன்மைத் தலைமை வனபாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, மாவட்ட வன அலுவலர்கள், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.